# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 13.06.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

கடந்த குத்பாவில் நான் கூறிய அதே கருத்தைத் தொடர்ந்தவாறு திருக்குர்ஆனின் பல்வேறு வசனங்கள் மூலம் **ரிஸ்க்** மற்றும் **ரஸ்ஸாக்** என்ற இறை பண்பு தொடர்பாக இன்னும் சில கருத்துக்களைக் கூறுவேன். நானே உங்களுக்கு **ரிஸ்க்** வழங்கக் கூடியவன். மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் எல்லா விதமான படைப்பினங்களுக்கும் நானே **ரிஸ்க்** வழங்குகின்றேன் என்று அல்லாஹ் கூறியுள்ளான். சிறந்த படைப்பினம் என்ற வகையில் மனிதர்களுக்கு பௌதீக, ஆன்மீக **ரிஸ்க்** -ற்கான தேவை இருக்கின்றது. ஒரு மூஃமின் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து அவனது கட்டளைகளுக்கு ஏற்ப தக்வாவுடன் செயல்பட்டால் அல்லாஹ் அவர்களுக்கு எந்தெந்த வழிகளில் **ரிஸ்க்** ஐ வழங்குவான் என்றால் அதனை மூஃமின் அல்லாத ஒருவரால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. அஹ்மதிகளிடமிருந்து பல கடிதங்கள் எனக்கு வருகின்றன. பல நாடுகளிலிருந்து வரும் இக்கடிதங்களில் அஹ்மதிகள் தங்களது அனுபவங்களையும் அல்லாஹ் அவர்கள் மீது செய்துள்ள அருள்களையும் பற்றி எழுதியிருக்கின்றார்கள். அல்லாஹ் எந்தெந்த வகையில் அவர்களின் தொழில்களில் அருள் செய்தவாறு அவர்களுக்கு தனது அருட்கொடைகளை வழங்குகின்றான் என்பதைப் பற்றி அவர்கள் எழுதியுள்ளார்கள். சில நேரங்களில் சில வியாபாரங்களில் இந்த அளவு லாபம் கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாமல் இருந்தது. ஆனால், அல்லாஹ் வழக்கத்திற்கு மாற்றமாக அப்படிப்பட்ட சூழ்நிலையில் தனது அருளை வழங்கியுள்ளான். அதனால் எதிர்பார்த்ததை விட பல மடங்கு அதிகமாக லாபம் கிடைத்தது. இப்படிப்பட்ட வி-யங்கள் எங்களது ஈமானின் வளர்ச்சிக்கு காரணமாக இருக்கின்றது என கடிதம் எழுதுபவர்கள் எழுதியுள்ளனர்.

உண்மையில் ஒரு உண்மையான மூஃமினின் அடையாளம் இதுவேயாகும். அல்லாஹ் அவர் மீது அருள் செய்யும் போது உடனடியாக அவரது கவனம் அல்லாஹ்வின் பக்கம் இருக்கும். அவர் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றார். அவர் அவ்வாறு நன்றி செலுத்த வேண்டும். ஏனென்றால், **வமன் யஸ்குர் வ இன்னமா யஸ்குர் லிநஃப்ஸிஹ்** - அதாவது எவர் நன்றி செலுத்தினாலும், அவரின் நன்றி செலுத்துதலின் பலன் அவருக்குத்தான் கிடைக்கும் என்பதைப் பற்றி ஒரு மூஃமினுக்கு நன்றாகத் தெரியும். இதுதான் ஒரு மூஃமினின் அடையாளமாக இருக்க வேண்டும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களும் தனது சந்ததிகளுக்காக **ரிஸ்க்** கிடைப்பதற்கு துஆ செய்த போது அத்துடன் இறைவனிடம், எனது சந்ததிகள் உனக்கு நன்றி செலுத்துபவர்களாகவும் இருக்க வேண்டும் என்று வேண்டினார்கள்.

திருக்குர்ஆனில் இதுபற்றி வந்துள்ளது.

**வர்ஸுக்ஹும் மினஸ்ஸமராத்தி லஅல்லகும் யஷ்குரூன்** - அவர்கள் உனக்கு நன்றி செலுத்துவதற்காக அவர்களுக்கு பழங்களிலிருந்து **ரிஸ்க்** வழங்குவாயாக என்று ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் துஆ செய்தார்கள்.

எனவே, தொழில்களிலும், வியாபாரங்களிலும், விவசாயத்திலும் அருள்கள் ஏற்படுவதற்கு துஆ செய்து ஒரு மூஃமின் அதன் பழங்களை, அருள்களைப் பார்க்கின்ற போது இறைவனுக்கு நன்றி செலுத்துவதில் அவர் முன்னேறுகின்றார். இந்த வி-யம் அவரது ஈமானின் வளர்சிக்கு காரணமாக இருக்கின்றது. இது அவரது தக்வாவின் வளர்ச்சிக்கு காரணமாக இருக்கின்றது. ஒரு மூஃமின் தனது ஈமானிலும், தக்வாவிலும், இறைவனுக்கு நன்றி செலுத்துவதிலும் முன்னேறும்போது அவருக்கு மேலும் அருட்கொடைகளை வழங்குகின்றான். அவரது பழங்களில் மேலும் அருள்கள் பெருகுகின்றன. தனது அருளால் அவரது **ரிஸ்க்** ஐ அல்லாஹ் மேலும் அதிகரிக்கச் செய்கின்றான். தங்களது ஈமானில் வளர்ச்சியைப் பெற்றவர்களுடன்தான் அல்லாஹ் இவ்வாறு பரிமாறுகின்றான்.

அல்லது ஈமானில் முன்னேற இப்படிப்பட்டவர்கள் முயற்சிகளைச் செய்து வருவார்கள். எனவே, **ரிஸ்க்** -ல் வளர்ச்சி ஏற்படுவது என்பது தற்செயலாக நடைபெறக்கூடிய ஒன்றல்ல. மாறாக, இது அல்லாஹ்வின் வாக்குறுதிக்கு ஏற்பவே நடந்துள்ளது.

**ல இன் ஸகர்த்தும் ல அஸீதன்னகும்** – அதாவது நீங்கள் எனக்கு நன்றி செலுத்தினால் நான் உங்களுக்கு மேலும் வழங்குவேன் என வாக்குறுதி அளித்துள்ளான்.

ஒரு மூஃமின் அல்லாதவர் இயற்கைச் சட்டத்திற்கு ஏற்ப அவரது உழைப்பிற்கு இறைவன் பலனைத் தந்துள்ளான் என்று கூறலாம். ஆனால், ஒரு மூஃமினுக்கு இதை விட அதிகமான ஒரு பொருளும் இருக்கின்றது. அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துதல், ஈமான், தக்வா ஆகியவற்றில் முன்னேறுவதுடன் அவர் உழைக்கின்ற போது அவருக்கு பல மடங்கு அதிகமாக பலன்கள் கிடைக்கின்றது. பிறகு அது உழைப்புடன் மட்டும் சார்ந்திருக்கக்கூடிய ஒன்றல்ல. மாறாக, ஒரு மூஃமினுடைய உழைப்பில் ஏதாவது குறை இருந்தாலும் கூட அல்லாஹ் தனது அருளால் அந்த குறையை நிறைவு செய்தவாறு அவருக்கு மேலும் வழங்குகின்றான். அல்லது அந்தக் குறையை நிறைவு செய்கின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அவருக்கு இறைவன் மீது நம்பிக்கை இருந்தால், இறைவன் **ரஸ்ஸாக்** ஆக இருக்கின்றான். எவர் தக்வாவை மேற்கொள்வாரோ அவருக்கு நான் பொறுப்பேற்கின்றேன் என்று இறைவன் கூறியுள்ளான்.

இதுவே **ரஸ்ஸாக்** ஆக இருக்கும் இறைவன் தனது அடியார்களுடன் பழகும் விதமாகும். சிறிதளவே உழைத்தாலும் அல்லாஹ் அதில் அருள் செய்கின்றான். சில சமயங்களில் மூஃமின் அல்லாதவர்களுக்கு கூறுவதற்காகவும், மூஃமின்களின் தனித்தன்மையை நிலைநாட்டுவதற்காகவும் அவர்கள் இருவரும் ஒரே விதமாக உழைத்திருந்தும் ஒரு மூஃமினுடைய பணியில் அல்லாஹ் அருள் செய்கின்றான். நாங்களும் உங்களுடன் சேர்ந்துதான் உழைத்தோம். ஆனால், உங்களுடைய தானியங்கள் மட்டும் எப்படி செழிப்பாக வளர்ந்துள்ளன என்று மற்றவர்கள் நம்மவர்களிடம் கேட்டுள்ளார்கள். அதற்கு மறுமொழியாக இந்த தானியங்கள் மூலம் கிடைக்கும் வருவாயில் பத்தில் ஒரு பங்கை அல்லது பதினாறில் ஒரு பங்கை இறை வழியில் கொடுக்க வேண்டும். அதுதான் உங்களை விட அதிகமாக எங்களுக்கு கிடைத்த செல்வமாகும் என நம்மவர்கள் பதில் கூறியுள்ளார்கள்.

**அல்லாஹ் இது தொடர்பாக கூறுகின்றான்:**

அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவருக்கு அவன் ஏதேனும் ஒரு வழியை ஏற்படுத்துவான். அவன் எதிர்பாராத இடத்திலிருந்து அவன் அவருக்கு உணவளிப்பான். (65 : 3, 4)

வழக்கத்திற்கு மாற்றமாக ஏற்படும் இந்த அருள்கள், அற்புதங்கள் ஆகியவற்றிற்கு அல்லாஹ் ஒரு நிபந்தனையை வைத்துள்ளான். அல்லாஹ் வழக்கத்திற்கு மாற்றமாக தனது **ரஸ்ஸாக்** என்ற பண்பை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்றால், அடியானும் வழக்கத்திற்கு மாற்றமாக இறைவனுடன் உள்ள உறவில் மேலும் முன்னேற முயற்சி செய்ய வேண்டியது வரும். அல்லாஹ் தனது அடியானின் பாதுகாவலனாக இருக்கின்றான் என்பதை நிரூபித்துக் காட்டும்போது அடியானும் தனது இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். அடியான் தனது இறைவனுக்கு செலுத்த வேண்டிய முழுமையான உரிமையை ஒருபோதும் செலுத்த முடியாது என்பது உண்மைதான். அல்லாஹ்வின் அருள்களுக்கு நன்றி செலுத்தியவாறு ஒரு மனிதன் தனது முழு வாழ்நாளும் சஜ்தாவில் வீழ்ந்து நெற்றியை தேய்த்துக் கொண்டிருந்தாலும் அடியானுக்குரிய உரிமையை அவனால் நிறைவேற்ற முடியாது. ஆனால், அதற்காக அவன் முயற்சி செய்ய வேண்டும். தக்வாவின் வழிகளின் பக்கம் பாதங்கள் முன்னேற வேண்டும். தக்வா என்றால் என்ன? இதற்கு விளக்கமளித்தவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

தக்வாவிற்கு பல பகுதிகள் உள்ளன. கர்வம், சுயநலம், ஹராமான செல்வத்தை விட்டும் விலகுதல், தீய ஒழுக்கங்களிலிருந்து தப்பித்தல் ஆகியவை தக்வாவாகும்.

ஒரு மூஃமின் இப்படிப்பட்ட தீமைகளிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவருக்கு அவன் ஏதேனும் ஒரு வழியை ஏற்படுத்துவான் (65 : 3, 4) என்ற வசனத்திற்கு விளக்கமளித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

நுட்பத்திலும் நுட்பமான பாவங்களை இறைவனுக்கு அஞ்சியவாறு எவர் விட்டுவிடுவாரோ அவருக்கு ஒவ்வொரு துன்பத்திலிருந்தும் இறைவன் இரட்சிப்பை வழங்குவான். பெரும்பாலார் நாங்கள் என்ன செய்வது? நாங்கள் இந்த பாவங்களை விட்டுவிடவே விரும்புகின்றோம். ஆனால் எங்களுக்கு எப்படிப்பட்ட துன்பங்கள் இதனால் வருகின்றன என்றால் நாங்கள் இந்த பாவங்களை செய்ய வேண்டியது வருகின்றது என்று கூறுகின்றனர். ஆனால் அவரை ஒவ்வொரு துன்பத்திலிருந்தும் காப்பாற்றுவதற்காக அல்லாஹ் வாக்குறுதி வழங்கியுள்ளான்.

இந்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோள் மூலம் இந்த மேற்கத்திய நாடுகளில் சமுதாய உதவிகளை (Social help) பெறுபவர்களுக்கு நான் கவனமூட்ட விரும்புகின்றேன். பல்வேறு நாடுகளில் இதற்கு பல்வேறு பெயர்கள் இருந்தாலும் இது அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் உதவியாகும். இந்த உதவி வேலையில்லாதவர்களுக்கு கிடைக்கின்றது அல்லது குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு கிடைக்கின்றது. அதன் மூலமாக குறைந்தபட்சம் கண்ணியமான முறையில் ஒருவர் தனது அன்றாட தேவைகளை நிறைவு செய்யும் தரத்தை பெற்று விட்டதை அரசாங்கம் உறுதி செய்கின்றது. இந்த மேற்கத்திய நாடுகளிலுள்ள சில அரசாங்கங்கள் மிகவும் திறந்த உள்ளத்துடன் இப்படிப்பட்ட உதவிகளை செய்திருக்கின்றது. பிரிட்டீஷ் அரசாங்கமும் இவ்வகையில் புகழுக்குரிய அரசாங்கமாகும். தனது குடிமக்களுக்கு பெரும் உதவிகளை இவர்கள் செய்துள்ளார்கள். ஆனால், சிலர் சிறு சிறு தொழில்களை செய்து கொண்டே அல்லது வெளிப்படையாக முழுமையாக தெரியாத வகையில் சில பணிகளில் இருந்தவாறே அல்லது டாக்ஸி ஓட்டுநராக பணியாற்றியவாறே அத்துடன் அரசாங்கத்திற்கு தவறாக தகவல்களைக் கொடுத்து அரசாங்க உதவியையும் பெறுகின்றார்கள். அல்லது அவர் சொந்த வீடு வாங்கிய நிலையில் அரசாங்கத்திடமிருந்து அந்த வீட்டிற்கான வாடகைத் தொகையை தருமாறு கேட்டு வாங்குகின்றார்கள். இப்படிப்பட்ட வி-யங்கள் தக்வாவிற்கு மிக தொலைவில் உள்ள வி-யங்களாகும். இவ்வாறு செய்வதன் மூலம் இரு மடங்கு அதிகமான பல குற்றங்களை செய்தவர்களாக இவர்கள் ஆகி விடுகின்றார்கள். அரசாங்கத்திற்கு தங்களது சரியான வருமானத்தை தெரிவிக்காமல் அரசாங்க வரிப்பணத்தை திருடுகின்றார்கள். இது அரசாங்க வரிப்பணத்தை திருடுவது மட்டும் ஆகாது. மாறாக, அரசாங்கத்தின் துறைகளை நடத்துவதற்காகவும் குடிமக்களுக்கு வசதிகளை செய்து தருவதற்காகவும் மற்றவர்கள் கொடுக்கின்ற அந்த வரிப்பணத்தையும் இவர்கள் தின்று விடுகின்றார்கள். பிறகு இதனால் பொய் சொன்ன குற்றத்திற்கும் இவர்கள் ஆளாகி விடுகின்றார்கள். அது இறைவனுக்கு இணைவைத்தலுக்கு சமமான ஒரு செயலாகும். இப்படிப்பட்டவர்கள் நம்மிடையே சிலர் இருந்தாலும் அப்படிப்பட்டவர்கள் தங்களை மட்டும் அல்லாஹ்விடம் இருந்து தூர விலக்கி வைக்கவில்லை. மாறாக, ஜமாஅத்திற்கும் அவர்கள் அவப்பெயரை ஏற்படுத்தி விடுகின்றார்கள். அரசாங்கத் துறையைச் சார்ந்தவர்களிடமும் பொதுமக்களிடமும் ஜமாஅத்திற்குள்ள பெருமையை குறைப்பவர்களாக இவர்கள் இருக்கின்றார்கள்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் இறைவன் மீது வைத்துள்ள நம்பிக்கையை விட்டுவிடும்போது நாத்திகத்தின் தன்மை அவனிடம் உருவாகி விடுகின்றது. இறைவன் மீது நம்பிக்கையும் இறைவனை சார்ந்திருப்பதும் அவனை எல்லாவற்றிற்கும் ஆற்றல் உள்ளவன் என்று உறுதி கொள்பவர்களால்தான் முடியும்.

எனவே, இந்த தரத்தைப் பெற நாம் முயற்சி செய்ய வேண்டும்.

எவர்கள் அரசாங்கத்திற்கு தவறாக தகவல்களைக் கொடுத்து அதன் மூலம் சில பவுண்டுகளை பெற்றுக் கொள்கின்றார்களோ அவர்கள் தங்களது செயல் மூலம் எங்களது **ராஸிக்** (ரிஸ்க் வழங்குபவன்) இறைவனல்ல.

எங்களுடைய தந்திரங்கள் தான் எங்களது **ரஸ்ஸாக்** ஆக இருக்கின்றது என்று மறைமுகமாக கூறுகின்றனர். இப்போது அரசாங்கத்தின் துறைகளில் உள்ளவர்களுக்கு இப்படிப்பட்ட சிலர் மீது சந்தேகம் வர ஆரம்பித்திருக்கிறது. ஆனால், இவர்கள் மிகுந்த தந்திரத்துடன் தாங்கள் ஏழ்மையில் இருப்பதுபோல் காட்டிக் கொள்கின்றார்கள். இதுவரை அரசாங்கத்தின் இந்த துறைகளுக்கு அஹ்மதிகள் ஏமாற்றமாட்டார்கள் என்ற நல்லெண்ணமே இருந்து வருகிறது. இப்படிப்பட்ட ஏமாற்றும் பணிகளில் ஈடுபடுபவர்கள் அரசாங்கத்தின் பிடியில் வந்து விட்டால் அதனால் தங்களது உரிமையை முறைப்படி பெற்றுக் கொண்டிருக்கின்ற சில நல்ல சிறந்த அஹ்மதிகள் இதனால் பாதிப்பிற்கு ஆளாகலாம். இதனால் ஜமாஅத் மீது அரசாங்கம் வைத்துள்ள நம்பிக்கை இல்லாமல் ஆகி விடும். இப்படிப்பட்ட எந்த நபரைப் பற்றியாவது உங்களுக்குத் தெரிய வந்தால் அவரிடமிருந்து சந்தா வாங்குவதை நிறுத்தி விடுங்கள் என்று நான் அமீர் சாஹிபிடம் கூறிவிட்டேன். அப்படிப்பட்டவர்களிடம் இருந்து சந்தா வாங்காமல் இருப்பதால் ஜமாஅத்தின் சந்தாக்களில் எந்த வித்தியாசமும் ஏற்படாது இன்-ா அல்லாஹ். அவ்வாறு வித்தியாசமான தாக்கம் ஏற்பட்டாலும் அதைப் பற்றிய எந்தக் கவலையும் நமக்கு வேண்டாம். குறைந்தபட்சம் அல்லாஹ்வுக்கு முன்பாக நாம் எடுத்து வைக்கும் அந்த செல்வம் தூய்மையானதாக இருக்கும்.

எனவே, இப்படிப்பட்ட நபர்கள் எண்ணிக்கையில் மிகச் சிலர் தான் என்றாலும் நான் அவர்களிடம் கூறிக் கொள்வது, நீங்கள் அல்லாஹ்வை **ரஸ்ஸாக்** ஆக கருதவில்லையென்றால் பிறகு அல்லாஹ்வின் மார்க்கத்திற்காக உங்களது செல்வம் தேவைப்படாது. பிறகு உங்களுடன் அல்லாஹ் விரும்புவதுபோல் பரிமாறட்டும்.

**ஒரு ஹதீஸில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக வந்திருக்கின்றது:**

நிச்சயமாக கண்ணியத்திற்குரிய வல்லமைமிக்க இறைவனே உங்களைப் படைத்துள்ளான். அவனே உங்களுக்கு **ரிஸ்க்** வழங்கியுள்ளான். எனவே நீங்கள் அவனை வணங்குங்கள். மேலும் எந்தப் பொருளையும் அவனுக்கு இணையாக வைக்காதீர்கள்.

இந்த உண்மையை ஒவ்வொருவரும் புரிந்து கொண்டால், அல்லாஹ் **ரிஸ்க்** -ற்கான ஏற்பாட்டை செய்வதை தனது பொறுப்பில் வைத்துள்ளான் என்பதை புரிந்து கொண்டால் உண்மையான முறையில் அவனை வணங்குவதன் பக்கம் கவனம் ஏற்படும். அவனை வணங்குவதன் பக்கம் கவனம் ஏற்படும்போது நாம் உண்மையான முறையில் அவனது அடியாராக ஆக முடியும். அதன் மூலம் போதுமென்ற மனம் நமக்கு உருவாகி விடும். அது உருவாகி விட்டால் அடுத்தவரின் **ரிஸ்க்** -ன் மீது நமது பார்வை செல்லாது. அடுத்தவரின் **ரிஸ்க்** -ன் மீது நமது பார்வை செல்லாமல் இருந்தால் பிறகு அல்லாஹ் அனுமதிக்காத வழிகளில் பொருள் சம்பாதிப்பதற்கான முயற்சிகளையும் நாம் செய்யமாட்டோம். அல்லாஹ் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு பேராசையிலிருந்தும் காப்பாற்றுவானாக.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நாம் தக்வாவிலும் தூய்மையிலும் எந்த அளவு முன்னேறியுள்ளோம் என்பதை எப்போதும் பார்க்க வேண்டும். அதற்கான அளவுகோல் குர்ஆனாகும். அதற்கான அளவுகோல் திருக்குர்ஆனாகும். அல்லாஹ் இறையச்சம் உள்ளவர்களின் அடையாளங்களில் ஒரு அடையாளமாக இறையச்சம் உள்ளவரை உலகின் வெறுக்கத்தக்க வி-யங்களிலிருந்து விடுவித்து அவரது பணிகளுக்கு அவனே போதுமானவனாக ஆகி விடுகின்றான் என்பதை வைத்துள்ளான்.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அரை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் இறையச்சமுள்ளவரை அநாவசியமான தேவைகளை உடையவராக ஆக்குவதில்லை. உதாரணமாக, ஏமாற்றாமல் தனது பணி நடக்காது என்று ஒரு கடைக்காரர் எண்ணுகின்றார். இதனால் ஏமாற்றுவதிலிருந்தும் அவர் விலகாமல் இருக்கின்றார். பொய் சொல்வதற்கு அவர் கட்டாய சூழ்நிலையில் இருப்பதை அவர் வெளிப்படுத்திக் காட்டுகின்றார். ஆனால் இந்த வி-யம் ஒருபோதும் உண்மையல்ல. இன்று

அரசாங்கத்திடம் தவறான தவகல்களைத் தந்து உதவி பெறுபவர்கள் அல்லது வரி செலுத்துவதிலிருந்தும் தப்புபவர்கள் கூட இதே உதாரணத்தின் கீழ்தான் வருகின்றார்கள். சிறிதளவு வறுமை ஏற்பட்டாலும் அதை சகித்துக் கொள்ள வேண்டும். இது இறைவனது திருப்தியைப் பெறுவதற்கு அவசியமானதாகும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ் பலவீனமானவன் என்று ஒருபோதும் கருதாதீர்கள். அவன் மிகுந்த ஆற்றல் மிக்கவன். அவனிடம் ஏதாவது ஒரு வி-யத்திற்காக நம்பிக்கை வைக்கும் போது அவன் கண்டிப்பாக உங்களுக்கு உதவி செய்வான்.

அல்லாஹ் மீது இப்படிப்பட்ட உண்மையான நம்பிக்கையை வைப்பதற்கான தவ்ஃபீகை வழங்குவானாக.

**அல்லாஹ் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்:**

**வமா ஆதய்தும் மின் ஸக்காதின் துரீதூன வஜ்ஹல்லாஹி ஃப உலாயிக ஹுமுல் முஃழிபூன்** - அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக எதை நீங்கள் ஸக்காத் ஆக கொடுத்தாலும் அப்படிப்பட்டவர்கள் இறைவனிடத்தில் தங்களது செல்வத்தை பெருகச் செய்கின்றனர் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

உங்களது செல்வத்தில் அருளையும் வளத்தையும் ஏற்படுத்துவதற்கான வழிமுறை இதுவேயாகும். அல்லாஹ்வின் வழியில் எந்த அளவு உங்களுக்கு செலவு செய்ய சக்தி உள்ளதோ அதற்கேற்ப செலவு செய்ய வேண்டும். இதனால் போதுமென்ற மனமும் உருவாகும். உங்களது சிந்தனையிலும் மாற்றம் உருவாகும். சுய விருப்பங்களை நிறைவு செய்வதற்குப் பகரமாக மார்க்கத் தேவைகளின் பக்கம் உங்கள் கவனம் திரும்பும். நான் எவ்வளவு சம்பாதிக்கின்றேனோ அந்த வருமானத்திற்கு ஏற்ப நான் சந்தா கொடுக்கின்றேன். எனது தந்திரத்தால் அரசாங்கத்திடமிருந்து நான் சில உதவிகளைப் பெற்றாலும் எனக்குள்ள வருவாய்க்கேற்ப நான் சந்தா கொடுக்கத்தானே செய்கின்றேன். இதனால் எவ்வித பாதிப்பும் இருக்காது என எவராவது கூறுவதாய் இருந்தால் அப்படிப்பட்ட அவரது செல்வம் இறைவனுக்கு தேவையில்லை.

**இது தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:**

நம்பிக்கைக் கொண்டவர்களே! நீங்கள் சம்பாதித்ததிலிருந்தும் தூய்மையானவற்றை செலவு செய்யுங்கள். (2 : 268)

நல்ல வழிகளிலும், தீய வழிகளிலும் சம்பாதித்து விட்டு ஆகுமான வழியில் சம்பாதித்த தூய்மையானவற்றை இறைவழியில் செலவு செய்யுங்கள் என்பது இந்த வசனத்தில் கூறப்படவில்லை. மாறாக, தூய்மையான வழியில்தான் நீங்கள் சம்பாதிக்க வேண்டும் என்றே அல்லாஹ் கூறுகின்றான். பிறகு அதிலிருந்தும் இறைவழியில் செலவு செய்யுமாறு அவன் நமக்கு கட்டளையிட்டுள்ளான். தவறான தகவல்கள் கொடுத்ததன் மூலம் சம்பாதிக்கப்பட்ட செல்வம் எவ்வாறு தூய்மையானதாக இருக்க முடியும்?

எனவே, எவராவது தப்பெண்ணம் காரணமாக தவறான வழியில் பலன் பெற்று வருகின்றார் என்றால், அவர் அதிலிருந்து விலக வேண்டும். இவ்வாறு தூய வழியில் சம்பாதித்து அதனை இறைவழியில் செலவு செய்யும்போது அதனை 700 மடங்காக அல்லது அதைவிட அதிகமாக அல்லாஹ் பெருகச் செய்வதாக கூறியுள்ளான். ஆனால், செலவு செய்யப்படும் பொருள் தூயதாக இருக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும்.

**வமிம்மா ரஸக்னாஹும் யுன்ஃபிகூன்** - நாம் அவர்களுக்கு வழங்கியவற்றில் இருந்து செலவு செய்வார்கள் என்று அல்லாஹ் கூறியிருப்பதிலிருந்து தெளிவாகும் வி-யம் என்னவென்றால், அல்லாஹ் ஒருபோதும் தான் அனுமதிக்காத வழிகளிலிருந்து நமக்கு செல்வத்தை வழங்க மாட்டான். அல்லாஹ் தூய்மையான ஆகுமான வழிகளிலிருந்து சம்பாதிக்கப்பட்ட செல்வத்தையே நமக்கு வழங்குகின்றான். எனவே,

ஒரு மூஃமீன் உடைய அடையாளமாக அவரது **ரிஸ்க்** –ம் தூய்மையானதாக இருக்கும் என்று கூறப்பட்டிருக்கின்றது. பிறகு அவர்கள் இந்த தூய **ரிஸ்க்** –லிருந்து ம் இறைவனின் வழியில் செலவும் செய்கின்றனர். திருடனும், லஞ்சம் வாங்குபவனும், பதுக்கல் பேர்வழிகளும் சம்பாதிக்கத்தான் செய்கின்றனர். இவ்வாறு பல்வேறு ஆகாத வழிகளில் சம்பாதிக்கின்றவர்கள் இருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் இந்த செல்வத்தை அல்லாஹ்தான் எங்களுக்கு வழங்கியுள்ளான் என்று கூற முடியுமா? அல்லாஹ் நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும்படி அடியார்களுக்கு கட்டளையிடும் போது அவன் மற்றவர்களது உரிமைகளை அபகரித்து சம்பாதிக்கும் செல்வத்தை ஆகுமானது என்று அங்கீகரிப்பானா? அவ்வாறு ஒருபோதும் அவன் செய்யமாட்டான். பாகிஸ்தானிலும் வேறு சில நாடுகளிலும் அல்லாஹ் அனுமதிக்காதவைகளில் சம்பாதித்தவற்றைப் பற்றி மக்கள் அவற்றை அல்லாஹ் தங்களுக்கு வழங்கியுள்ளான் என்று கூறினாலும் இப்படிப்பட்ட தூய்மையற்ற செல்வம் இறைவனுடையது ஆகாது. இது **ஷய்த்தான்** மூலம் சம்பாதித்த செல்வமாகும். பாகிஸ்தானிலுள்ள பெரும் பெரும் வியாபாரிகள் அல்லாஹ் அனுமதிக்காத வழிகளில் சம்பாதித்து விட்டு தங்களது வீடுகளின் சுவர்களில் **ஹாதா மின் ஃபஸ்லி ரப்பீ** – இது எனது இறைவனின் அருளாகும் என எழுதியுள்ளனர். **இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்**. அரசியல்வாதிகள் சமுதாயத்தின் செல்வங்களை கொள்ளையடிக்கின்றார்கள். தவறான வழியில் சம்பாதித்த செல்வம் சிறிய அளவில் இருந்தாலும் பெரிய அளவில் இருந்தாலும் அது தூய செல்வமாக இருக்க முடியாது. தூய்மையற்ற செல்வம் இறைவனுடைய செல்வம் அல்ல. அது இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட தகுதியற்றதாகும்.

எனவே, ஒவ்வொரு அஹ்மதியும் அவரது செல்வம் தூயதாக இருக்க வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். பிறகு அவர் அந்த செல்வம் அதிகரிக்க வேண்டும் என்று கருதினால் அதனை அவர் இறைவனுடைய வழியில் செலவு செய்தால், பிறகு அல்லாஹ் அவரது செல்வத்தில் எப்படி அருள்களை வழங்குகின்றான் என்பதை அவர் பார்ப்பார். சிலர் எங்களது வருமானத்தைக் கருத்தில் கொண்டு நாங்கள் பட்ஜெட் எழுதினோம். ஆனால், வியாபாரத்தில் அல்லது தொழிலில் எதிர்பாராத இழப்புகள் ஏற்பட்டதன் காரணமாக எங்களது வாக்குறுதியை எங்களுக்கு நிறைவேற்ற முடியாமல் ஆகி விட்டது என்று எனக்கு எழுதுகின்றார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களைத் தாங்களே ஆய்வு செய்து பார்த்து தக்வாவுடன் செயல்பட்டு தங்களது பட்ஜெட்டை மீண்டும் சரியாக எழுதலாம். ஆனால், தக்வா நிபந்தனையாகும். அல்லாஹ் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளான்.

அல்லாஹ் கூறுகின்றான். அவர்கள் உம்மிடம் நாங்கள் எதனை செலவு செய்ய வேண்டும் என்றும் வினவுகின்றனர். உங்களுக்கு கஷ்டம் ஏற்படாத அளவில் (செலவு செய்வீராக) என்று நீர் கூறுவீராக. (2:220)

உள்ளத்தில் தக்வா இருந்தால் அல்லாஹ்வின் இந்த கட்டளையின் பக்கமும் உங்கள் பார்வை இருந்தால், எனது வழியில் செலவு செய்பவர்களுக்கு நான் அதிகமாக வழங்குவேன் என்ற அல்லாஹ்வின் கட்டளையின் பக்கம் கவனம் இருந்தால் ஒரு மூஃமின இறைவழியில் அதிகமாக செலவு செய்யவே முயற்சி செய்வார். அதன் மூலம் அதிகமாக அல்லாஹ்வின் அருள்களுக்கு அவர் வாரிசாகி விடுகின்றார். அல்லாஹ்வின் அருளால் தங்கள் மீது கஷ்டங்களைப் போட்டுக் கொண்டு அவற்றை சகித்தவாறு வாழும் பல அஹ்மதிகளும் உள்ளனர். ஆனால் அவர்கள் தங்கள் சந்தாக்களில் குறைவு ஏற்பட விட்டதேயில்லை. எனவே, இந்த சந்தாவும் ஒவ்வொருவரது ஈமானின் நிலைமை மற்றும் இறைவன் மீதுள்ள நம்பிக்கை ஆகியவற்றையே சார்ந்திருக்கிறது. இவ்வாறு அவர்களது **ரிஸ்க்** –ல் அல்லாஹ் அருள் செய்வான் என்பதை அவர்கள் அறிவார்கள். மேலும் அல்லாஹ் தனது திருப்தியின் சொர்க்கத்திற்கு அவர்களை வாரிசாக்குவான் என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு துஆவை செய்து வந்தார்கள். இந்தக் காலத்தில் இந்த துஆவிற்கு மிகுந்த முக்கியத்துவம் இருக்கின்றது. ஹஸ்ரத் உம்மே சல்மா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுபுஹ் தொழுகையை நிறைவேற்றிய பிறகு, சலாம் கொடுத்த பிறகு இவ்வாறு துஆ செய்வார்கள்.

**அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக இல்மன் நாஃபிஅன் வ ரிஸ்க்கன் தய்யிபன் வ அமலன் முதகப்பலன்** – அல்லாஹ்வே! நான் உன்னிடம் பயன் அளிக்கக்கூடிய அறிவையும், தூய்மையான **ரிஸ்க்** –ஐயும் ஏற்றுக் கொள்வதற்கு தகுதியுடைய செயலையும் வேண்டுகின்றேன்.

எனவே, இந்த துஆவின் பக்கமும் நமது கவனம் இருக்க வேண்டும். கடந்த குத்பாவில் **ரிஸ்க்** என்ற சொல் பங்கு என்ற பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது என்று கூறியிருந்தேன். அந்த பங்கு நல்லதாகவும் இருக்கலாம். தீயதாகவும் இருக்கலாம்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:**

**வ தஜ்அலூன ரிஸ்ககும் வ அன்னகும் துகஸ்ஸிபூன்** – நீங்கள் பொய் கூறுவதன் மூலம் உங்களது **ரிஸ்க்** ஐ உருவாக்குகின்றீர்கள். (56:83)

இது சூரா வாக்கிஆவில் உள்ள வசனமாகும். இந்த சூராவில் முன்னவர்களின் காலகட்டத்திலும் பின்னவர்களின் காலகட்டத்திலும் உள்ள நற்பாக்கியம் பெற்றவர்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அவ்வாறே முன்னவர்கள் பின்னவர்கள் ஆகியோரின் காலத்திலுள்ள பாக்கியமிழந்தவர்களைப் பற்றியும் இதில் கூறப்பட்டிருக்கின்றது. நான் ஓதிய இந்த (56:83) வசனத்தில் பொய்ப்படுத்துவதன் மூலம் தங்களது **ரிஸ்க்** ஐ உருவாக்கிக் கொள்கின்ற அந்த பாக்கியம் இழந்தவர்கள் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அவர்களின் நிலை எந்த அளவு வீழ்ச்சி அடைந்து விட்டது என்றால், இறைவனைப் பற்றிய அச்சம் அவர்களிடம் இல்லை. மாறாக, உலகைப் பற்றிய அச்சம் அவர்களுக்கு இருக்கின்றது. இப்படிப்பட்ட மக்கள் **ஷய்த்தானின்** மடியில் அமர்ந்துள்ளார்கள். சில மக்கள் தங்களுக்கு உலகில் கிடைக்கும் **ரிஸ்க்** இல்லாமல் ஆகி விடுமே என்ற அச்சத்தில் உண்மையை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். தங்களை ஆலிம் என்று கருதும் சிலர் அவர்களுக்கு பள்ளிவாசல்களிலுள்ள மெம்பர்கள் கிடைத்துள்ளதால் அதன் மூலமாக பொதுமக்களை கொள்ளையடிப்பது நின்று விடக்கூடாதே என்ற அச்சத்தில் அவர்கள் உண்மையை மறுக்கின்றார்கள். அவர்களது இந்த செயல்களின் காரணமாக அவர்கள் பூமியின் கிருமிகளாக மாறி விட்டதால் அவர்களது பங்கில் உண்மையைப் புரிந்து கொள்வது என்பது இல்லாமல் ஆகி விட்டது. உண்மையைப் பொய்ப்படுத்துவதே அவர்களது வேலையாகி விட்டது. எதுவரையென்றால் இந்த நிலையிலேயே அவர்களது இறுதி நேரம் வந்து விடும். பிறகு அவர்களது பிரச்சனை இறைவனோடு இருக்கும்.

எந்த நாடுகளில் அஹ்மதிய்யத்திற்கு எதிர்ப்பு இருந்து வருகிறதோ அங்கு அரசியல்வாதிகளும் முல்லாக்களும் இணைந்து செயல்படுவதை நாம் பார்க்கின்றோம். இணைந்து நின்றவாறே இவர்கள் அஹ்மதிய்யத்தை எதிர்க்கின்றார்கள். கிலாஃபத் தோன்றி 100 ஆண்டுகள் நிறைவடைந்தது இவர்களிடம் பொறாமை மற்றும் காழ்ப்புணர்ச்சியின் நெருப்பை இன்னும் அதிகமாக கொளுந்துவிட்டு எரிய வைத்துள்ளது. நமது இந்த பொய்யான **ரிஸ்க்** நம்மிடமிருந்து பிடுங்கப்பட்டு விடக்கூடாதே என்று இவர்கள் அஞ்சுகின்றனர். அரசியல்வாதிகளுக்கு மார்க்கத்துடன் எவ்வித ஆர்வமும் ஈடுபாடும் இல்லாமல் இருப்பதால் நாம் மவ்லவிமார்கள் கூறுவதைக் கேட்காமலும் அஹ்மதிய்யத்தை எதிர்க்காமலும் இருந்தால், நமக்கு குறைவான ஓட்டுக்கள்தான் கிடைக்கும் என்று அவர்கள் கருதுகின்றார்கள். நாட்டிற்கு தொண்டாற்றும் எந்த நோக்கமும் அவர்களுக்கு இல்லை. நாம் அஹ்மதிகளை எதிர்க்கவில்லை என்றால் நாம் நமது அரியணையையும் இழந்து நாம் பிறரை கொள்ளையடிப்பதிலிருந்தும் விலக வேண்டியது வரும் என்று இவர்கள் கருதுகின்றனர். தூய்மையற்ற **ரிஸ்க்** –ன் அடித்தளம் பொய்யின் மீது வைக்கப்படுவதால் அதுவும் இவர்களது கைகளிலிருந்து பிடுங்கப்பட்டு விடும். நமது வயிற்றுப் பிழைப்பிற்கான வழிகள் மூடப்பட்டு விடுமே என்ற அச்சமே மவ்லவிகளுக்கு இருக்கின்றது. மதரஸாக்கள், ஜாமிஆ ஆகிய பெயரில் மக்களை முட்டாள்களாக்கி அவர்களிடமிருந்து பைசாக்களை வசூல் செய்யும் இவர்கள் அல்லது இதற்காக சில அரசாங்கங்களிடமிருந்து தொகைகளைப் பெறும் இவர்கள் இந்த வகையில் வருமானம் நின்று விடக்கூடாதே என்று அஞ்சுகின்றார்கள். இப்படிப்பட்ட மக்களது **ரிஸ்க்** பொய்ப்படுத்தப்படுவதை சார்ந்திருக்கிறது. அல்லது இவர்கள் பொய் கூறி **ரிஸ்க்** ஐ சம்பாதிப்பவர்கள் என்று கூறலாம். அவர்களது பங்கில் எந்த அம்சத்தை எடுத்துப் பார்த்தாலும் பொய் கூறுவதால் அவர்களுக்கு **ரிஸ்க்**

கிடைப்பதைப் பார்க்க முடியும். இது தீய **ரிஸ்க்** ஆகும். உண்மையை மறுத்து எதிர்த்து எல்லை மீறி செல்வதால் இந்த **ரிஸ்க்** அவர்களுக்கு கிடைத்துள்ளது. பிறகு அல்லாஹ்வும் சூடான நீரால் இவர்களுக்கு விருந்து அளிப்பதாக கூறியுள்ளான்.

**இது தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான்:**

**தஸ்லியது ஜஹீம்** – இவர்களது தங்குமிடம் எரியும் நரகமாகும். (56:95)

இன்று அஹ்மதிய்யத்திற்கு எதிராக வலுவான எதிர்ப்பு குறிப்பாக பாகிஸ்தானிலும் இந்தோனேஷியாவிலும் இருந்து வருகிறது. இரண்டு இடங்களிலும் அரசியல்வாதிகளும் முல்லாக்களும் இணைந்திருப்பதன் விளைவாகவே எதிர்ப்பு வலுவாக இருக்கின்றது. பொதுமக்களை இவர்கள் முட்டாள்களாக ஆக்கியுள்ளார்கள். இது நமது மார்க்க தன்மான உணர்வுடன் தொடர்புடைய வி–யமாக இருப்பதால், எழுங்கள்! அஹ்மதிகளை கொலை செய்யுங்கள் என்று இவர்கள் கூறுகின்றனர். நமது **ரிஸ்க்** முடிந்து விடக்கூடாதே என்பதுதான் இவர்களது உண்மையான அச்சமாகும். நாம் கொள்ளையடிப்பது நின்று விடக்கூடாதே என்ற அச்சம்தான் இவர்களுக்கு இருக்கிறது. எனவே அஹ்மதிகள் பொறுமையுடனும் தைரியத்துடனும் துஆவுடனும் செயல்பட வேண்டும் என்று நான் கூறிக் கொள்கின்றேன்.

அல்லாஹ்வின் புறமிருந்து தோன்றியுள்ள மஸீஹை நீங்கள் ஏற்றுக் கொண்டுள்ளீர்கள். அதனால் நிச்சயமாக நீங்கள் இறைவனுக்கு நெருக்கமானவர்களாக இருக்கின்றீர்கள். அல்லாஹ் தனக்கு நெருக்கமாக உள்ளவர்களுக்கு அருட்கொடைகள் நிரம்பிய சொர்க்கத்தைப் பற்றிய நற்செய்தியை வழங்கியுள்ளான். கடந்த 120 வருட காலமாக இவர்கள் எல்லா வகையிலும் எதிர்த்துப் பார்த்து விட்டார்கள். தற்காலிக துன்பங்களை நாம் சகிக்க வேண்டியது வந்தது. ஆனால், இவர்களது விருப்பம் ஒருபோதும் நிறைவேறவில்லை. ஒரு சர்வாதிகாரி, நான் இவர்களது கைகளில் பிச்சைப் பாத்திரத்தை ஏந்த வைப்பேன் என்று அறிவித்தார். அவருக்கு ஏற்பட்ட முடிவு எல்லாருக்கும் வெளிப்படையாகத் தெரிந்த ஒன்றுதான். ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத் தனிப்பட்ட முறையிலும் ஜமாஅத் அளவிலும் பொருளாதாரத்தில் விரிவடைந்து கொண்டே சென்றது. இன்னொருவர் எழுந்து ஜமாஅத்தை எல்லா வகையிலும் செயலற்றதாக ஆக்க முயற்சி செய்தார். அவரது முடிவையும் நாம் பார்த்து விட்டோம். அதன் மூலம் ஜமாஅத்திற்கு முன்னேற்றத்தின் புதிய வழிகள் திறந்து கொண்டேயிருந்தன. இந்த **ராஸிக்** ஆன இறைவன் **ரிஸ்க்** –ற்கான புதிய வழிகளையும் புதிய புதிய கதவுகளையும் ஜமாஅத்திற்காக திறந்து தந்தான். அல்லாஹ் எல்லா வகையிலும் நமக்காக அவன் **ரஸ்ஸாக்** ஆக இருப்பதையும் எல்லா விதமான ஆற்றல்களுக்கும் எஜமானனாக இருப்பதையும் நமக்கு வெளிப்படுத்திக் காட்டியுள்ளான்.

**இதுபற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:**

**இன்னல்லாஹா ஹுவர்ரஸ்ஸாக்கு ஸுல் குவ்வத்துல் மதீன்** – நிச்சயமாக அல்லாஹ்வே அதிகமாக **ரிஸ்க்** வழங்குபவனும், ஆற்றல்மிக்கவனும், வல்லோனும் ஆவான்.

எனவே, நாம் அந்த இறைவனை வணங்கி அவனிடம் **ரிஸ்க்** ஐ கேட்பவர்களாக இருக்கின்றோம். அவனுக்கு அஞ்சுபவர்களாக நாம் இருக்கின்றோம். இந்த உலக மக்கள் நமது **ரிஸ்க்** ஐ தடை செய்ய முடியாது. நமது ஈமானையும் அசைக்க முடியாது. அல்லாஹ்வை வணங்குவதிலிருந்தும் நம்மை தடை செய்யவும் முடியாது.

மே 27 ஆம் தேதிக்குப் பிறகு பாகிஸ்தானின் பல்வேறு நகரங்களில் ஹைதராபாத்திற்குப் பக்கத்திலுள்ள கோட்ரி, என்ற நகரத்திலும், லட்கானா, ஆஸாத், காஷ்மீர், கோட்லி போன்ற பஞ்சாபின் சில நகரங்களில் அஹ்மதிகள் மீது மீண்டும் கொடுமைகள் இழைக்கப்பட்டுள்ளது. பைசலாபாத்தில் பஞ்சாப் மெடிக்கல் காலேஜில் படிக்கும் மாணவர்களை காலேஜிலிருந்து வெளியேற்றி விட்டார்கள். இவ்வாறு அஹ்மதிகளின் **ரிஸ்க்** ஐ நிறுத்துவதற்கு அவர்கள் முயற்சி செய்திருப்பதாக அவர்கள் கருதுகின்றார்கள். அஹ்மதி மாணவர்கள் டாக்டர்களாகிக் கொண்டிருக்கின்றனர். இறுதி ஆண்டின் மாணவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள். எனவே, அவர்கள் பயப்பட்டு நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை மறுத்துப் பழித்து விடுகிறோம் என்று

கூறி விடுவார்கள் என்று எதிரிகள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்களின் ஈமானின் நிலை பற்றி அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்கள் பயப்பட்டு அஹ்மதிய்யத்தை விட்டு விடுவார்கள் என்று அவர்கள் நினைத்தார்கள். கோட்ரியில் அஹ்மதிகளை முற்றுகை இடுவதும் உடைமைகளை எரிப்பதும் இருந்து வருகிறது. ஒரு அஹ்மதி வீட்டிலிருந்த சாமான்களை வெளியே போட்டு விட்டு அந்த வீட்டை எரித்துள்ளார்கள். வீடுகளை இவர்கள் முற்றுகையிட்டுள்ளார்கள். அஞ்சுகின்ற சமுதாயம் என இவர்கள் நம்மைப் பற்றி நினைக்கின்றார்கள். அல்லது தமது ஈமானை விலைபேசும் மக்கள் என இவர்கள் நம்மைப் பற்றி கருதுகின்றனர்.

நாமோ எல்லாவித ஆற்றல்களையும் கொண்ட வல்லமைமிக்க அந்த இறைவனை நம்புவர்கள் ஆவோம். அவன் தனது அடியார்களுக்காக தனது தன்மான உணர்வை வெளிப்படுத்துவான். பிறகு எப்போது எதிரிகளை அவன் பிடிப்பானோ அப்போது அவர்களை மண்ணோடு மண்ணாக ஆக்கி விடுவான். இதை தான் நாம் இதுவரை பார்த்துள்ளோம். எனவே, எல்லா அஹ்மதிகளும் பொறுமையுடனும் தைரியத்துடனும் செயல்படுங்கள்.

இந்தோனேஷியாவில் அஹ்மதிகள் தப்லீக் செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அவர்களிடம் நான் கூறிக்கொள்வது நீங்கள் துஆவின் பக்கம் அதிகம் கவனம் செலுத்துங்கள். வெளிப்படையாக தப்லீக் அங்கு தடை செய்யப்படவில்லையென்றாலும் இதற்காக அவர்கள் வகுத்துள்ள பல்வேறு வழிமுறைகளைப் பார்க்கும் போது அது தப்லீக் செய்ய தடை விதிப்பதற்கு சமமாகவே அவர்களது நடவடிக்கைகள் இருப்பதை காட்டுகிறது. பாகிஸ்தானில் சட்டரீதியாக இப்படிப்பட்ட தடைகளை ஏற்படுத்திய பிறகு ஜமாஅத் பரவுவதை அவர்களால் எவ்விதத்தில் தடை செய்ய முடிந்தது? முழு உலகிலும் முன்பை விட அதிகமாகத்தான் அல்லாஹ்வின் அருள் மழை பொழிந்தது. இந்தோனேஷிய ஜமாஅத்தின் மீது அரசாங்கம் விதித்துள்ள இந்த தடைகளும் முன்பை விட அதிகமாக ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கு காரணமாக அமையும் இன்-ா அல்லாஹ்.

எனவே, அதிகமாக துஆ செய்யுங்கள். இவர்களது திட்டங்கள் இவர்களுக்கு எதிராகவே திரும்பிவிடும் அந்த நேரம் வெகு தொலைவில் இல்லை. இன்-ா அல்லாஹ். உலகிலுள்ள எல்லா அஹ்மதிகளும் தங்களது பாகிஸ்தானியன், இந்தோனேஷியன் அஹ்மதி சகோதரர்களுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கு எளிதை ஏற்படுத்துவானாக. அவர்களது துன்பங்களை அகற்றுவானாக. இறுதியாக நான் துஆவிற்கான ஒரு அறிவிப்பை செய்கின்றேன். இந்த வாரம் நான் அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் பயணத்தில் செல்ல இருக்கின்றேன். அங்கு மாநாடுகள் நடைபெறும். கிலாஃபத் ஜுபிளியையொட்டி ஜமாஅத்துகள் பெரிய அளவில் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. இவர்களது கடிதங்களில் இவர்களது விருப்பங்கள் பெரிய அளவில் இருப்பதைப் பார்க்கின்றேன். நான் நேரடியாக இவர்களைச் சந்திப்பதன் விளைவாக பல்வேறு வகையில் ஜமாஅத்திற்கு நல் விளைவுகள் ஏற்படுகிறது. அமெரிக்காவில் நான் மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும். அல்லாஹ் எல்லா வகையிலும் தனது உதவியின் காட்சிகளைக் காட்டுவானாக. ஜமாஅத்திற்காக இந்த பயணம் எல்லா வகையிலும் அருளுக்குரியதாக அமையட்டும். எதற்காக இந்த பயணம் மேற்கொள்ளப்படுகிறதோ அல்லாஹ் அதன் எல்லா நோக்கங்களையும் நாம் பெறுவதற்கு உதவி செய்வானாக. அல்லாஹ் இந்த நாடுகளிலுள்ள அஹ்மதிகளுக்கு முன்னேறுவதற்கான ஒரு புதிய ஆன்மாவை உருவாக்குவானாக. முழு உலகிலுமுள்ள அஹ்மதிகளிடமும் இந்த புதிய ஆன்மாவை உருவாக்குவானாக. இந்த நூற்றாண்டில் நாம் செய்கின்ற புதிய உடன்படிக்கைகள் நாம் நடத்துகின்ற மாநாடுகள் நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் மூலம் அல்லாஹ் ஒரு புதிய ஆன்மாவை ஒவ்வொருவரிடத்திலும் ஊதுவானாக. அல்லாஹ் பயணத்தின் வழியில் எந்த துன்பங்கள் இருந்தாலும் அதை எளிதாக்கித் தருவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH, LONDON**
**ON 13.06.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**